**திருக்கோவில் பிரதேச சபை - 2023**

**--------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருக்கோவில் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருக்கோவில் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், நீர்கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உட்பட மொத்தம் ரூபா 1,277,526 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படும் வரை கிடைக்கப் பெற்ற அனைத்து கொடுப்பனவுச் சிட்டைகளும் உள்ளடக்கப்பட்டு கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1),(2),(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 1,462,860 தொகையான 04 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது | முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது அறிவித்தல் என்பன குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்பட்டு பதில் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களை |

| | | | |
|---|---|---|---|
| | வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்ததும் பூரணப்படுத்தப்படும். | உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,533,099 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 3,380,923 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மறுக்கப்பட்டிருந்த ரூபா 100,240 பெறுமதியான காசோலை தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதிவரை காசேட்டில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு உண்மையான காசு மீதி கண்டறிவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காசோலையானது வங்கியால் தீர்வையாக்க மறுக்கப்பட்டதற்கிணங்க இன்னும் வங்கிக் கணக்கிணங்கக் கூற்றில் காட்டப்பட்டு வருகின்றது. | காசேட்டில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு உண்மையான காசு மீதி கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நான்கு வருடங்களுக்கு மேலாக ரூபா 3,960,887 தொகையான 03 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளில் மீதியாக காணப்பட்டிருந்தது. மேலும், சபையினால் 2018 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் கையிருப்பு காசாக ரூபா 17,705,923 தொகை காணப்பட்டிருந்தும், மீளாய்வாண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை மேற்கொள்ளத் தேவையான காசுத் தொகை தவிர்ந்த மிகுதி தொகையினை சபைக்கு வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை உச்சப்படுத்தக் கூடிய மூலங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக நிதியினை சபையின் நோக்கங்களை அடையக் கூடிய வகையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | 6,000 | - | - | - |
| (ii) | வாடகை | 4,895,000 | 5,443,021 | 5134430 | 4,066,628 | 2,565,000 | 6,736,598 | 3,467,415 | 3,269,183 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 689,000 | 826,990 | 826,990 | - | 810,000 | 505,225 | 505,225 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,262,000 | 3,220,440 | 3,107,850 | 171,937 | 3,758,000 | 2,895,269 | 2,895,269 | - |
| (v) | கூட்டுத் தொகை | 8,846,000 | 9,490,451 | 9,069,270 | 4,238,565 | 7,139,000 | 10,137,092 | 6,867,909 | 3,269,183 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 1,948,123 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், இத் தொகை நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு பெற்றவர்களாக காணப்படுவதுடன் இவர்களிடமிருந்து முன்னைய ஆண்டின் நிலுவைகள் அறவிடப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 488,853 தொகையினால் நிலுவை அதிகரித்துக் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்குள் அறவிட எதிர்பார்த்துள்ளோம் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் பெறவேண்டியதாக உள்ள முத்திரைக் கட்டணம் ரூபா 1,436,450 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை விடுத்துள்ள ஆவணங்கள் கிடைக்கப்பெறுமிடத்து விரைவாக மாகாண இறைவரித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்படும். | உரிய முறைப்படி உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| தம்பிலுவில் பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியிலுள்ள 06 கடையறை மற்றும் பழைய கடையறையொன்றினை வாடகைக்கு வழங்குவதற்கு 04 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதியோர கடைகளில் மற்றும் நடமாடும் வாகனளங்களில் மக்கள் பொருட்களினை கொள்வனவு செய்வதால் கடையறைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள வர்த்தகர்கள் முன்வருவதில்லை | கடையறைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திண்மக்கழிவு நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் குப்பைகளினை வெட்டி அரியும் இயந்திரம் மற்றும் பேப்பர் தயாரிக்கும் இரண்டு பொறி இயந்திரங்கள் பல வருட காலங்களாக முறையான பராமரிப்பின்றி பழுதடைந்துள்ளதுடன் திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த இயந்திரங்களை பாவனைக்கு ஏற்றவாறு திருத்துவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையில் காணப்படும் 09 வாகனங்களினை மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 17,678,131 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நெல் சுத்திகரிக்கும் மற்றும் நெல் உலர்த்தும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு தேவையான கட்டிடத்தை புனரமைப்பதற்கு ரூபா 10.6 மில்லியன் தொகை சபையினால் மதிப்பிடப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இக் கட்டிடம் புனரமைக்கப்படாது குறித்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுவதுடன் உத்தரவாதக் காலமும் நிறைவடையக் கூடிய நிலை காணப்பட்டிருந்தது. | பொருத்தமான பதில் தரப்படவில்லை. | கட்டிடத்தினை புனரமைத்து கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் இறந்த 05 ஊழியர்களின் கடன் தொகை ரூபா 316,792 தொகை அறவிடப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | மரணப் பணிக்கொடை ஓய்வூதியப் பணிக்கொடை பெறும் பட்சத்தில் அதிலிருந்து குறித்த தொகை அறவீடு செய்யப்படும். | உரியவர்களிடமிருந்து அல்லது பிணையாளிடமிருந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களில் 13 நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் காலாவதியான போதிலும், அவற்றை புதுப்பிப்பதற்கு சபையினால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் காலாவதியான தொழில் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம், அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |